1990 ஏப்ரல் 6]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தினை இந்த அரசு நிச்சயமாகக் கருத்திலே கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள் —விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால்; அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. எஸ். ஆர். இராதா : ** * * * * *

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்,)

4. கவன ஈர்ப்பு

(அ) சென்னையில் சிறு தொழில்களுக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் குடியிருப்புகளாகப் பயன்படுத்தப்படுவதால் சிறு தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அடுத்ததாக, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்த கவன ஈர்ப்பு. திரு. செங்கை சிவம் அவர்கள் மாண்புமிகு சமூக நலன் --ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னையில் சிறு தொழிலுக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்களைப் பலர் குடியிருப்பதற்கு உபயோகப்படுத்தி வருவதால் சிறுதொழில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை. மாண்புமிகு சமூக நலன்—ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ** (கூச்சல் — குழப்பம்).

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.